
# நெஞ்சத்து வரிகள்...



அ.தனு

# நெஞ்சத்து

Divisional Secretary
Manmunai South West
Paddipalai

# வரிகள்...

## கவிதைத் தொகுப்பு

அ.தனுராஜ்
முகிழ்நிலை ஆசிரியர்
நாடகமும் அரங்கியலும்
02ம் வருடம்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

வெளியீடு:
நுண்கலை மன்றம்
யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி

# நூல் விபரம்

நூலின் பெயர் : நெஞ்சத்து வரிகள்
(கவிதைத் தொகுப்பு)

நூலாசிரியர் : அ.தனுராஜ்

முகவரி : அம்பிளாந்துறை,
கொக்கட்டிச்சோலை,
மட்டக்களப்பு.

முதற்பதிப்பு : 2012, ஆவணி

ஓவியங்கள் : ஜெசீதா.சி

கணனி வடிவமைப்பு: த.கோகுலறவணன்

பக்கம் : i- viii + 1-53

அச்சுப்பதிப்பு :ஜெயஸ்ரீ பிறிண்டேர்ஸ்
நீராவியடி, யாழ்ப்பாணம்

விலை : 100 ரூபா

பிரதிகள் : 400 பிரதிகள்

**என்னை ஈன்றெடுத்த**
**என் தாய் தந்தையினருக்கு**
**இத் தொகுப்பை**
**அர்ப்பணம் செய்கின்றேன்.**



## பீடாதிபதியின் ஆசியுரை

உயர்திரு. S.K. யோகநாதன்,
பீடாதிபதி,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்.

எமது கல்லூரியிலே வருடந்தோறும் இணைப்பாடவிதான செயற்பாடுகள் பல இடம் பெறுகின்றன. அவற்றில் ஒன்றாக பல கவிதைத் தொகுப்புக்களை வருடந்தோறும் முகிழ்நிலை ஆசிரியர்கள் வெளியிட்டு வருகின்றனர். அந்தவகையிலே இவ்வருடம் 12ம் அணியில் நாடகத்துறையிலே கல்வி பயிலும் செல்வன் அ.தனுராஜ்"நெஞ்சத்து வரிகள்" என்ற கவிதைத் தொகுப்பை வெளியிடுகின்றார் இவரது முயற்சி பாராட்டுக்குரியது.

இவரது கவிதைத் தொகுப்பிலே தனது உள்ளத்தில் தோன்றிய நெழிவுசுழிவுகள், ஏக்கங்கள், சிந்தனைகள், உணர்வுகள் என்பனவற்றை சமுதாயப் பார்வையிலே அனுபவங்க்ளினூடாக படித்தவருக்கும் பாமர மக்களுக்கும் விளங்கும் வகையில் கவியாக வடித்ததோடு அக் கவிதைகளுடன் அதற்குப் பொருத்தமான ஓவியங்களையும் இணைத்து வாசகரின் சிந்தனையை தூண்டும் வகையில் இன் நூலை ஆக்கியுள்ளார்.

மேலும் இவர் பாடசாலையில் கல்வி கற்கும் காலத்திலேயே கவிவடிக்கும் ஆற்றலுடையவர் என்பதை "மெல்லப் பறத்தல்" என்ற கவிதைத் தொகுப்பில் இம் மாணவனால் எழுதி வெளிவந்த வறுமை என்ற கவிதையை குறிப்பிடலாம்.

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியானது தனது மாணவர்களிடம் உள்ள திறன்களை வெளிக்காட்டும் ஒரு களமாக அமையும் என்பதில் ஐயமில்லை. அந்தவகையில் இம் மாணவனின் ஆக்கத்திறமையை வெளிக்காட்டுவதில் பேருவகை அடைகின்றது.

இவ் ஆக்கச் செயற்பாடு இவரது கவித்திறன்களை மட்டுமன்றி இவரது ஆளுமைகளையும் வெளிப்படுத்தி நிற்கின்றது. இம் மாணவனை இச் செயற்பாட்டில் தொடர்ந்து ஈடுபட வாழ்த்துகின்றேன்.

# உபபீடாதிபதியின் ஆசியுரை



திருமதி. ஜெயமலர்தியாகலிங்கம்
உபபீடாதிபதி
(கல்வியும் தர மேம்பாடும்)
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
கோப்பாய்.

பல்வேறு வழிகளில் அறிவைப் பெறுவதற்கும் அதனூடாக உள்ளத்தில் நம்பிக்கையை உருவாக்கிக் கொள்வதற்கும் அதன்வழி செயற்பட்டு பல திறன்களை வளர்த்துக் கொள்வதற்குமான இளைஞர் சந்ததியை உருவாக்குவது புதிய கலைத்திட்ட அணுகுமுறையினால் எதிர்பார்க்கப்படுகின்றது. இவற்றிற்கு அமைவாக யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி முகிழ்நிலை ஆசிரியர்கள் தமது பயிற்சிக் காலத்தில் துறைசார்ந்த வாண்மைத்துவ விருத்தியில் மட்டுமன்றி பல்வேறு வழிகளிலும் தமது அறிவு, ஆற்றல்களை வெளிப்படுத்தும் வாய்ப்பினை வழங்கும் களமாகக் கல்லூரிக் காலத்தை பயன்படுத்தி வருகின்றார்கள்.

அந்தவகையில் 12ம் அணி நாடகத்துறை முகிழ்நிலை ஆசிரியர் செல்வன் அ.தனுராஜ் தனது துறைசார்ந்த விருத்தியுடன் உள்ளாந்த கற்பனையாற்றலையும் வெளிப்படத்தும் வகையில் "நெஞ்சத்து வரிகள்" என்ற கவிதைத் தொகுப்பை வெளியிடுகின்றார். தனது கவிதைகளின் மூலம் மனிதனது உள்ளத்து உணர்வுகள், மனிதப்பண்புகள் என்பன இழையோடும் வகையிலும் இன்றைய சமூகத்தின்தேவை "மாற்றம்" என்பதையும் தொட்டுக்காட்டுகின்றார்.

மேலும் தமது ஆற்றலையும் அறிவையும் தரமான கற்பித்தலுக்கு தரமான ஆசிரியர் என்ற இன்றைய ஆசிரியத்துவத்தின் தொனிப்பொருளுக்கேற்ப வளர்த்துக் கொள்வதில் ஆர்வமுடையவராக விளங்குவதற்கு எனது வாழ்த்துக்களைதெரிவிப்பதோடு எதிர்காலத்தில் பல் துறை சார்ந்த ஆசிரியராகத் தம்மை மாற்றி பல்திறன் பண்பாடு கொண்ட சமூகத்தை உருவாக்கும் மனப்பாங்கினையும் வளர்த்து உயர்வுபெற இறையாசியை வேண்டி பாராட்டுவதில் மகிழ்வடைகின்றேன். மேலும் இக் கவிதைத் தொகுப்பு முழுமை பெறுவதற்கு ஒத்துழைப்பு நல்கிய அனைவரையும் வாழ்த்துகின்றேன்.

## துறைசார் விரிவுரையாளரின் வாழ்த்துரை

க.இ.கமலநாதன்,
விரிவுரையாளர்,
யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி,



கிழக்கின் அழகன் -தமிழ்
வளர்க்கும் கவிஞன்
வெளுக்கும் வானம்
விரைவாய் வேண்டும் - என
துடிக்கும் இளைஞன்
நாடகன் நல்ல
பாடகன் - மனிதத்
தேடலிலே இக் கவிக்கு
நாயகன்
யாழ். தேசிய கல்வியியற்
கல்லூரித் தாயவளின்
சொல் விற்பன்னன் அவன்
நல் விருந்தாய்
நவின்றளிக்கும்
நெஞ்சத்து வரிகள்
கவிப்புதையல் - இது
புதுப் படையல்
இன்னும் இன்னும்
ஆக்கங்கள் வெளிவர
வேண்டும்- உன்
உள்ளத்து உணர்வுகள்
கவியாகிட வேண்டும்
நற்றமிழ் வளர்த்திட வேண்டும்
நாட்டிற்கு உழைத்திட வேண்டும்
ஆசிரியத்துவத்தாலே
அகிலத்தை ஆள வேண்டும்
வாழ்த்துகின்றேன் வானுயர
வாழ்த்துகின்றேன்.

## தமிழ் விரிவுரையாளரின் வாழ்த்துரை



திரு.பா.பாலகணேசன்,
விரிவுரையாளர்,
யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்.

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் 12ம் அணி முகிழ்நிலை ஆசிரியர் அ.தனுராஜ் தனது கற்றல், அனுபவம் என்பவற்றின் வெளிப்பாடாக "நெஞ்சத்து வரிகள்" எனும் கவிதைத் தொகுப்பினை பிரசவித்துள்ளார். இவருடைய ஒவ்வொரு கவிதைகளும் தலைப்புக்கு பொருத்தமான வகையில் கவித்துவ ஆற்றலை வெளிப்படுத்தி நிற்கின்றன.

தனது உள்ளத்தில் தோன்றிய உணர்வுகளை கவியாக வடித்திருப்பதன் மூலம் இவரின் மொழியாளமும் தமிழ் பற்றும் தமிழறிவும் நன்கு புலப்பட்டு நிற்கின்றன. கல்லூரிக் காலத்திலே கற்றலில் ஆர்வமுடையவராகவும் குறிப்பாக தமிழ் பாடத்தினை விரும்பி கற்பவராகவும் திகழ்கின்றார். கல்லூரிக் காலத்திலே தமிழ் மன்ற நிகழ்வுகளிலும் ஏனைய நிகழ்வுகளிலும் சிறப்புடன் தன்னுடைய கவித்துவ ஆற்றலை வெளிப்படுத்தி வருகின்றார்.

இவ்வாறு மேலும் மேலும் தன்னுடைய கவித்திறனை வளர்த்து கவிதை புனைவதனூடாக சமூகப்பிரச்சினைகளையும் சமூக நோக்கங்களையும் வெளிப்படுத்தி நற்பாங்குடன் உயர்வு பெறுவதற்கு இறையருளை வேண்டி வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்.



## என் பேனாவிலிருந்து......

நாம் விஞ்ஞான யுகத்திலே ஊசலாடிக் கொண்டிருக்கின்றோம். எமது வாழ்க்கை முறை எம் வாழ்விற்கு விலங்கிட நினைக்கின்றது. இதை கருத்தில் கொண்டு பாதைமாறிய மனித வாழ்க்கை பார்போற்ற வாழும் மனிதநேயமென பலவற்றையும் சிந்தித்த என் மனம்.

மனித நடத்தையின் நெழிவுசுழிவுகள், ஏக்கங்கள், உணர்வுகள் சிந்தனைகள், இயற்கை போன்றவற்றை சமூதாயப் பார்வையிலே அனுபவங்களூடாக படித்தவருக்கும், பாமர மக்களுக்கும் விளங்கக் கூடிய வகையில் எனது உள்ளத்து உணர்வுளை "நெஞ்சத்து வரிகள்" எனும் கவிதைத் தொகுப்பாக வெளியீடு செய்கின்றேன்.

இந்தப் படைப்பிற்கு வளம் சேர்க்கும் வகையில் அட்டைப் படமும் கவிதைகளுக்குரிய கருத்து வெளிப்பாட்டு சித்திரங்களும் அமைந் துள்ளன. இதனை செல்வி.சி.ஜெசீதா ஆக்கியுள்ளார். மற்றும் இத் தொகுப்பு முழுமைபெற உதவிய செல்வன். த.கோகுலறமணன், ஆகியோரது சேவையும் அளப்பெரியது.

இவ் ஆக்கத்தினை வெளியிட தகுந்த களமாக அமைந்த கல்லூரித்தாயை முதற்கண் வணங்கி இதனை வெளியிட ஊக்கமளித்த மதிப்பிற்குரிய பீடாதிபதி அவர்களுக்கும், உப பீடாதிபதிகள் இணைப்பாளர்கள், விரிவுரையாளர்கள், என்சக முகிழ்நிலை ஆசிரியர்கள் அனைவருக்கும் எனது மனம் மகிழ்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

*அழகப்பன் தனுராஜ்*

# தாயவளே..

பொய்மையில்லா அன்பும்
பொல்லாப்பில்லா எம் உறவும்
கருவறையில் தொப்பில் கொடியாய்
படர்ந்து கல்லறை
தாண்டியும் தொடரும் தாயவளே
பஞ்சணையில் படுக்கவைத்து
பதறி அழ உதிரம் பாலாய்
ஊட்டி உருக்கொடுத்த உத்தமியே
ஒரு நொடி உனை மறந்தால்
நரகத்திலும் இடம்கிடைக்காமல்
நட்டாற்றில் வள்ளமாய்
நான் அலைவேன் தாயே!





# நெஞ்சத்து வரிகள்

வலிமை கொண்ட இதயம்
ஞானம் கொண்ட மூளை
சிந்தித்து களைத்துவிட
உள்ளத்தில் நிழலான
நிஜங்கள் பல

சிதைந்த நாகரீகம்
புதைந்த மனிதநேயம்
அழிந்து போன இளமை
தவறிவிட்ட வாழ்க்கை
இடரிப்போன இயற்கை
பெண்ணின் அழுகை
ஆணின் இயல்புகள்
தோழமையின் தோல்விகளென
எத்தனை எத்தனை
நெஞ்சை நொருங்கிடச்
செய்கையிலே

இன்னும் சில
மறக்கமுடிய வில்லை
மறுக்க முடியவில்லை

தடம் பதித்த மனிதம்
தாலாட்டில் அன்னை
ஒளி கொடுத்த ஆசான்
தோழமையின் நட்பு
வாழத் துடிக்கும் இதயம்
வானுயரும் மனிதநேயம்
எழில் கொஞ்சும் இயற்கையென

உள்ளத்தில் தோன்றி
சிந்தனையை கிளறி
நெஞ்சத்து வரிகளாய்
ஊற்றெடுப்பு.

# மனமே!

பண்பாட்டுச் சிற்ப்பங்கள் பல உண்டு
எம் மண்ணிலே- ஆனால்
பண்பட்ட உள்ளங்கள் சிலவே
உண்டு இப்பூமியிலே
புண்பட்டு பண்பட்டால்- நம்
புத்தி தெளிவாகும்
புத்துணர்ச்சி உருவாகும்
புரிந்து கொள்மனமே! புரிந்துகொள்.

பூவுக்குள் தேனிருக்கும்- புன்னகைக்குள்
புதுவாழ்வு பூத்திருக்கும்
சிற்ப்பிக்குள் முத்திருக்கும்- சிந்தனைக்குள்
சிகரமும் சிறிதாகிவிடும்
கடலுக்குள் நீரிருக்கும்- கஷ்ரத்திற்குள்
இஷ்ரம் காத்திருக்கும்
கவலைகள் கழைந்து- நிம்மதி
தேடு மனமே!. நிம்மதி தேடு.



# படைத்தாய்

என்னைப் படைத்தாய்
இரு கண்ணைப் படைத்தாய்
இயற்கை படைத்தாய்
இனிமை கொடுத்தாய்
இரவைப் படைத்தாய்
உறக்கம் கொடுத்தாய்
ஒளியை கொடுத்தாய்
இருளை கெடுத்தாய்
இறைவா!
பலர் வழி மாறினோம்
சிலர் வாழ வழி தேடினோம்
பலரைப் படைத்து
பாத்திரம் கொடுத்து
பழி பல செய்யச் சொன்னாயா?
ஏன் பாதைமாறி செல்கிறார்கள்
பழிச்சொல் கேட்கிறார்கள்
பண்பானவரை படைத்தாய்
அன்பானவராய் படைத்தாய்
இன்பமும் கொடுத்து துன்பமும் கெடுத்தாய்
துயருற ஏன் வாழக் கற்றாரோ?
மற்றவர் துன்பம் அறியாரோ?
மண்ணில் பிறக்கையில் நல்லவர்தானே
மறுபடி ஏனவர் மடையரானார்
மர்மமாய் இருக்கிறதே!







பெண்ணே! நீதான்
நாட்டின் கண்ணாம்- அன்று
ஏன்..? புண்கள் என்ற
நிலை இன்று

சிந்தித்துப் பார்த்தாயா..?
நீயொரு
காவியநாயகி சாவித்திரியா..?
பத்தினிப்பெண் கண்ணகியோ..?
சமுக சேவையில் அன்னை தெரேஷாவா..?
விண்வெளிச் சாதனையில் கல்ப்பனா சாவ்லாவா..?

இல்லையே..?
அப்படித்தான் இல்லாவிட்டாலும்
நீயொரு பெண்ணாகவாவது இருக்கலாமே..?

# தெரிந்து கொள்...

தொலைதூரம் இல்லை எம் வாழ்வு
தொலைந்து விடுமோ எம் கனவு
தேகம் தந்த உணர்வு
தெளிவில்லாத நிலவோ? சுடரில்லாத ஒளியோ?
இல்லையே அன்புத்தோழி
நாம் கற்றிட அதிகம் இருக்க
தினம் தினம் கற்பனையிலே
மிதப்பது எதற்காக?
வாழ்வின் அர்த்தம் பல
அதை அறிந்திட்டால் சுகமே
அனுபவமே அடைவைத்தரும்
அறிவைக்கொண்டு அர்த்தம் தேடு
சிறிய உழியே சிற்பத்தை வடிக்கும்
ஓவியத்திலே பல நுட்பம் ஒழிந்து கிடக்கும்
வாழ்வுதனை உணர்ந்து கொண்டால்
எம் வாழ்நாள் இமையத்திலே.



## பிரிப்பு

*கடலில் இருந்து*
*நன்னீர் பிரிப்பு*
*ஏற்றுக் கொண்டேன்.*

*உன்னில் இருந்து*
*என்னைப் பிரித்தால்*
*ஏற்றுக்கொள்வேனா?*


## உணர்வு

*உள்ளத்தில் சுனாமி*
*உலக நடத்தை கண்டால்*
*கண்களில் கண்ணீர் மழை*
*உணர்வு பூகம்பமாய்*
*வெடித்தால்......?*

## கனவு

*அதிசயம்...!*
*நான் கண்ட கனவு*
*காண்பவர்கள் எல்லாம்*
*நல்லவர்களாக*

மிச்சம் மீதி எதுவும் இல்லை
மச்சம் மாமிசம் உண்பதற்கு
உதிர்ந்து விடும் தளிர்கள்
கோடை வெயிலில் தோழா
பின்னர் மரப்பட்டையிலும்
பசுமை மாரிமழையில்
பலதோல்விகள் பாடமிருக்க
தூண்டிலில் பட்ட மீனாய்
துன்பத்தில் துவழ்வதேனோ
நாளைய வாழ்வையும் நாசம் செய்யவா?
வேண்டாமடா வேண்டாம் தோழா
வீறுகொண்டு எழுவோம்
வெற்றிநடை தொடர்வோம்
மனப்பாரமது போக்கி
மனப்பாடமது நோக்கி





# சமாதானம் வேண்டும்.


சிந்தனையில் சிறந்த வழி
தோன்றிட வேண்டும்.
சீக்கிரமே சமாதானம் நாட்டில்
மலர்ந்திட வேண்டும்.

தொந்தரவு தந்தவர்கள் சரித்திரங்கள்
அழிந்திட வேண்டும்.
தொலைதூரம் சென்று வர
நிம்மதி வேண்டும்.

வெந்த புண்ணில் வேலைப்பாய்ச்சும்
வெறியர்கள் அழிந்திட வேண்டும்.
வெட்டிச்சண்டை யுத்தமது
மறைந்திட வேண்டும்.

மரண பயம்தனை நீக்கி
மானிட நேயம் வளர்த்திட வேண்டும்.
சுதந்திரம் மலர்ந்து சுயமாய் வாழ
யுகமொன்று பிறந்திட வேண்டும்.

சுந்தர நாடு சுடுகாடாகும்
மந்திரம்தானே மாய்திட வேண்டும்.
இனவாதம் இருளாய்ப்போக
சமாதானம் ஒளியாய் ஒளிர்ந்திட வேண்டும்.



# பொது நன்மை


மலர்ந்த மலர்களெல்லாம்
பூஜைக்கு போவதில்லை.
பிறக்கும் மனிதரெல்லாம்
பொதுநன்மை புரிவதில்லை.

காய்த்துக் கனிந்த மரமே
கல்லெறி பொல்லடி வாங்கும்.
நல்லது செய்வாரே தினம்
நாய்ப்பேச்சு கேட்ப்பாரே.

வாழ்ந்தது கொஞ்சக்காலம்
வாழப்போவதும் கொஞ்சக்காலம்.
வழிமாறி நடப்பதெல்லாம்
விதிமாறிப் போவதற்கே.

வாள் கொண்டு வெட்டுபவனை
சிறு நூல் கொண்டு வென்றுவிடலாம்.
வரம்மொன்று ஏற்ப்பதற்கு
பல பொதுநன்மை செய்திடுவோம்.

# தலைப்பட்டால் விலைப்படலாம்.



போனால் கிடைக்காது
போகாமலும் இருக்காது

நேற்று, இன்று, நாளை
இனிய கனிப்பு இதன் மதிப்பு

24 மணித்தியாலம் நாளாக
இரண்டரப் பிரித்து இரவு பகல்
இதமான பகுப்பு இதன் சிறப்பு

யாருக்கும் சொந்தமில்லை
எவருடனும் பகையும் கொள்வதில்லை

பொன் போன்றது மண்ணாகி விடலாமா?
தலைப்பட்டால் - நீ
நோபல் பரிசுக்கும் விலைப்படலாம்

போனால் திரும்பாது
போதைக்கும் மயங்காது
போய்க்கிட்டே இருக்கும்

# பிறந்த மண்

மட்டுநகர் வாவி
தொட்டுணரும்
அம்பிளாந்துறையூர்
அழகொளி தீட்டியே
இறையருள் மீட்டிட
நாலைந்து ஆலயம்

மண்வாசம் மணம் கமழ
மனிதநேயம் இழையோடும்
பச்சை வெளிகள்
பசுந்தாற் புல்வெளிகள்
பனையொடு தென்னை
பசுஞ் சோலையின் தொன்மை

ஏறேரும் தடத்தினிலே
மீனேறும் ஊரெனது
பாலாடை மேவிடவே
பால்மாடு மந்தையோடு
பல தொழிலும் செழித்திடுதே

ஏழ்மையிலும் எளிமை
வீடு வந்தோர்
காலாற முன்னே
தயிர் பருகக் கொடுத்து
விருந்தோம்பல் விண்ணுயர
குற்றரிசி சோறாக்கி
நாட்டுக் கோழி சுவையுணர

ஊருக்கோர் கலைக் கழகம்
சங்கமிக்க சங்கமென
விளையாட்டில் தேசியம் வரை
கதிரவன் புகலொடு
கலைமகள் புகழாரம்
தேசமெங்கும்

பாராளுமன்றம்வரை
அரியம் எம்.பி.உரை
கலை விழாக்கள் உச்சத்தில்
மற்றவனும் சொந்த மென்று
சாதி பேதம் இங்கில்லை
மரணவீடும்,மங்கள நிகழ்வும்
மக்கள் கூட்டம் திரளாக.

விதி விலக்காய் சிலவும்
அது மனிதப் பண்பு
மறுக்கவில்லை
இதுதான் நான் பிறந்தமண்.

இருக்கும் வரைக்கும் நிலைத்தே இருப்போம்
இறக்கும் வரைக்கும் சிரித்தே இருப்போம்
இலட்சியம் ஒன்றை தலையாய் நினைப்போம்
விடியல்தாண்டியும் விரைந்தே உழைப்போம்

நிம்மதி இங்கே நிரந்தரமில்லை
நீர்க்குமிழிதானே வாழ்வின் கொள்கை

இன்றை மட்டும் நினைவில் வைப்போம்
இருண்டபாதை கனவென மறப்போம்
தேடல் ஒன்றே தெளிவை கொடுக்கும்
தேன்கவிபாடி தேகம் தொடுவோம்

வஞ்சனை செய்பவன் வாடியே போவான்
வாழத்தெரிந்தவன் வான்வரை தொடுவான்
வரட்சியென்றும் வாடிட வேண்டாம்
பசுமைதேடி புரட்சி செய்வோம்

ஏற்ற இறக்கம் நேரில் கண்டோம்
ஏணிப்படியாய் ஏறிச் செல்வோம்

# புரட்சி செய்வோம்




## குடிகாரனே

நிறைகுடம் நிலை தடுமாறிவிழ
நிற்கதியில் நிஜங்கள்
பொய்த்துப் போகிறது
கருக்குடும்பத்தில் கருக்கலைப்பு
கண் மூடித்தனத்தால்
மூளி தடுக்கிவிழ
போதைமலையில் மோதிவிட்டாய்.

போதையில் விழுந்தால்
புலம்பியே திரிவாய்
புன்னகை ஓசோனில்
நைத்திரேற்று காபனாய்
குடி செல்லரித்துவிடும்.

சோகம் தெரியாதுதான்
மறுநாள் சோர்வு புரியும்.
உன் வீட்டு இருள்
விடியாத இரவாய்
மதிகலங்கி மனைவியை அடிக்க
அவள் ஓலம் மறுகிராமம் வரை
குடும்பச் சண்டை குடிகாரன்
தொடங்கி விட்டானே
கூடி நின்று சிரிப்பார் எத்தனைபேர்

பெற்றவள் மயங்க
பிஞ்சுகள் கலங்க
மதிகெட்டு மாய நித்திரை- நீ
மறுநாள் மௌனமாய்
மனைவி இருக்க
நடந்தவை ஞாபகம் தீட்ட
மனம் குறுகி
முகம் சுழித்து நிற்பாய்
அதை மறக்க மீண்டும் போதை
இத்தனையும் தேவையா?



சொன்னாலும் தீராது  என்
சோகம்தான் மாறாது
சொந்தக்கதை சோகக்கதை  ஆனால்
இந்தக்கதை நல்ல கதை

பெண்ணாக பிறந்து விட்டேன்
பேதையாய் வளந்து விட்டேன்
ஆணின அதிகாரத்திலே - நான்
தலையாட்டும் பொம்மையாய்

தங்கத்திலே தாலி செய்து
தட்டிலே பல லட்சம் தட்ஷனையாய்
தந்தால்த்தான் திருமணமாம்
பணமில்லையேல் வாழாவெட்டியா நிலை

விலைபோகா விலைபொருளாய் நான்
விலைக் கழிவு இல்லையோ
விரும்பியவர் வாங்குவதற்கு
விரும்பி அவர் வாங்குவதற்கு

# பேதையாய்...!



# சதி ஜதியாக

மனிதரில் ஓர்சாதி நாம் கண்டும்
மானிடனாய் மண்ணில் வாழ்வு கொண்டும்
மனிதர்கள் மடையர்கள் மனிதனில்
பல்சாதி கண்டு ஓர்சதி செய்தார்களே.

சாதிகள் இங்கில்லையேல் சண்டையும்
தேவையில்லை. உயர்வுதாழ்வு
எதற்க்காக..?
உன்னதமாய் நாம் வாழ்வோமே
மானிடராய் மனிதம் காண்போமே.

எதை நாம் கொண்டு வந்தோம்
எதை நாம் கொண்டு செல்வோம்
ஏழை என்றோர் ஏளனம் எதற்காக?
ஏழ்மை ஒழிந்தால் எளிமை தானே வரும்

கலை மாறுமோ? கலாசாரம் தேறுமோ?
மதம் என்னும் சதி விட்டு
மாற்றங்கள் பல கொண்டும்
மனிதமெனும் ஜதி வளர்ப்போமே...!



# தெருவிளக்கு

இருண்ட பாதையில் வரண்ட நிலம்
வாழ்வின் விடியல் நோக்கி வாலிபத் தேடலாய்
பயமறியா இளம் கன்றுபோல்
நடைபிணமாய் நடையளந்து செல்கையிலே
ஒற்றைக்காலில் ஓர் ஜீவன்
ஓங்கி ஒளிர்வதைப் போல்
பகலொளியாய் மெல்லொளி கண்டேன்
கண்ணாடி ஒளியாய்
கண்களில் விழுந்து சிந்தையில் தெறிக்க
பல கேள்வி தோன்றிடுதே

பணி செய்து பலனெதிர் பாரா
பண்பாளனாய் ஒளி கொடுக்கிறாயா?
பக்குவம் இழந்து தரித்திரம் செய்பவன்
அகவிருள் நீக்குவதாய்
இருள் விலக்குகிறாயா?
எதிலும் பக்கம் இரண்டு
தத்துவம் சொல்லி தனிமை போக்குகிறாயா?
செல்வப் புள்ளியை சுற்றும் மானிடனாய்
உன்னைச் சுற்றி ஆயிரம் பூச்சிகள்
உன் அழகொளி தேடிவந்து
அறியாமையால் அழிந்து போகிறதே

வெறுத்த வாழ்வில் வேதனை மாற்றி
நிவேதனம் கொடுக்கும் நல்லவன் போல
இருள் போக்கி ஒளி தருகிறாயா?
ஆபிரகாம் அமெரிக்கா ஆண்டது
உன் ஒளியின் மகத்துவம் அல்லோ
இருளில் ஒளியாய்
துன்பத்திலும் இன்பம் வரும்
தத்துவம் மந்திரமாய் சொல்கிறாயே...!



# ஓடிப் போகலாம்

நீ ஒரு ஜாடி
நானே அதற்கேற்ற மூடி
தயக்கமேன் லேடி
தயங்காதே நீ ஓடி
என்னை வளர்க்க வைக்காதே தாடி
கையில் பிடிக்க வைக்காதே பீடி
விருப்பமென்றால் என்னோட வாடி
இருவரும் சேர்ந்து
ஓடிப்போகலாம்

ஓடலாம்.
கொஞ்சம் கேள்
நாம் ஓடிப்போனால் எம்மை விட்டு
சொந்தம், பந்தம், மானம், மரியாதை
சந்தோசம் நிம்மதி இப்படி
எத்தனை எத்தனை ஓடிவிடும்

இப்ப ஓடலாமா?

வேணாண்டா சாமி.

# மனுத்தாக்கல்

அதிகாரம் ஆட்சியிலே
அடிமைகள் துச்சமென
காலிலே செருப்பாய்.
நியாயம் கேட்டல்
அநியாயம் எமக்கெதிராய்

பதவி வெறியில் சிலர்
பாவமென எமைப்போல் பலர்
மனம் கொதிக்கிறது
என்ன செய்ய முடியும்?
பதவி அதிகாரம் படையெடுத்து
பாம்பாய் கொத்திவிடும் நிலை

பாவம் நாங்கள்
இறைவனிடம் மனக்குறைகூறி
மனுத்தாக்கல் செய்து
மன ஆறுதல் தினம்.



# மாலையில் சூரியன்

பரந்தவெளியில் மிளிர்ந்த வண்ணமே
தெளிந்த பாலில் தெரிந்த கறையோ?
இல்லையே அடிவானம் சிவக்க
ஆழகொழி கொடுக்கிறாய்

ஓளி பிறக்க பகலாய் உழைத்தாய்
ஓய்வெடுக்க சிவந்தகை காட்டுகிறாயோ?
இல்லையேல் காரிருள் சூழப்போவதற்கு
அபாயக் குறிதானோ உன் சென்நிறம்

மரக்கிளை நடுவே அழகுற உனை
கண்டேன் ஆச்சரியம் கொண்டேன்
என்னைக் கண்டு நாணம் கொள்கிறாயோ?
மெல்ல மெல்ல நீ மறைவதேனோ?

நீ களைத்து விட்டாயோ?
மெல்லப் போய் உறங்கு
ஐயோ நீ மறைந்து விட்டாயே
நாளை வருவாயா காத்திருப்பேன்.



# பரதத்தில் மங்கை

அரங்கில் ஓர் அதிசயம்
பாவை ஒன்று பாவம் கொண்டு
பரதத்தில் பல கதை சொல்லுகிறாள்
அதிலொன்று பாவம் பெண்ணென்று
பாரதி சிந்தை துலக்குகின்றாள்

மெல்லிடையில் மேனகை நடனம்
மேனியவள் மேதையென்றிடவே
மெய் சிலுக்க பெண்மையினை
மெய் மறந்து சிதம்பரத்தில்
பேயாய் நான் கண்டேன்

நவரசம் பருகிடவே நளினத்தில்
நல்லகதை சொல்லுகிறாள்
நங்கையவள் நாட்டியத்திற்கு
நன்றி சொல்ல வார்த்தை கொல்லை
கருவிழி கற்பின் கதை சொல்கையிலே

காலிரண்டும் கதகளி ஆடிடவே
ஊனத்தில் குழி தோண்டி
உணர்ச்சித் தண்ணீர் கண்டு விட
நன்னீரில் நான் குளித்து- அவள்
நடனத்தில் முகம் துடைத்தேன்

ஆணென்ன பெண்ணென்ன உயிர்தானே
ஆண்டவன் விதைப்பின் பயிர்தானே
ஆடிய ஆங்கீகத்தில்- என்
அறிவுச்சிந்தை திறந்து விட்டாள்
ஐயோ பாரதி சிந்தை துலக்கி விட்டாள்.

அ.தனு



# நிலா இல்லா வானம்

உறங்கும் சூரியனின் விழிப்பாய்
எதிரொளிப்பாய் பொன்நிலாவே
கடலலையில் ரைற்ரானிக்காய்
வான் திரையில் வண்ணம் நீயல்லோ

நீயில்லா வானம் - நிலவே
தனிரில்லா மரம் போல
கண்ணில்லா வாழ்வு எதற்கு
நீயில்லா வானம் வெறுப்பு

உன்னிடம்தானே சோகம் உரைக்க
வளர்பிறையாய் உனை எதிர் பார்த்து
தேய்பிறையில் சோகம் சேர்த்து- நான்
சொல்லிடவே இருப்பேன் காத்து

பாலைவனம் காண விரும்பவில்லை
பௌர்ணமியாய் நீ தந்த இன்பம்
என்றும் துறந்ததில்லை நீ ஏன்
எனக்கு அடிக்கடி தருகிறாய் தொல்லை

நீ இல்லாத இரவுகளில்
விதவைக் கோலத்தில் ஆகாயம்
பொலிவிழந்து வாடி வதங்கி
வரட்சியாய் இருக்கின்றதே நிலவே



# சூழலும்

# சுகாதாரமும்

சுத்தம் சுகம்தானே தரும்
அசுத்தம்ஆழிப்பேரலையாகி விடும்
ஆடம்பர வாழ்வில் கைதியாய் - நீ
அறிந்தும் அறியாமலும் ஏனோ


ஜடங்களைக் கொண்டு (இ)யந்திரம் படைத்தாய்
வளங்களைக் கொன்று வாழ்வைத் தொலைத்தாய்
மாரியிலும் வரட்சி இங்கே -மனிதா
உன்மகத்துவம் தானடா..

வித்தைகளின் விந்தைகளால்- மனிதா
விடியாத நோய்கள் இன்று
நூற்றாண்டை விஞ்சிய வாழ்வு அன்று
பாதியில் போகிறாயே இன்று

நீரின் நிம்மதி பறித்தாய்
நிலத்தின் நித்திரை கெடுத்தாய் - உன்
வியூகங்களால் விண்ணிலும் ஓட்டை முளைக்க
மூச்சுக்காற்றின் முட்செடி வளர்த்து விட்டாய்

மந்தமாருதம் மந்தமாய் போனதே
தந்தசுகங்கள் தலைவிரி கோலத்தில்
அசுத்தத்தில் மேடைகட்டி
சுகம் பற்றி ஏன் பிரசங்கம்

உள்ளத்தை உரமாக்கி உன்
உடலை நல்ல விளைபயிராக்கி
சுற்றத்தில் களைசாடி
சுகமென்ற நல் விளைபொருள் தேடு மனிதா...!



# விடைகொடுக்கின்றேன்

பள்ளியெனும் அறிவகமே
அன்பாக பண்பு தந்த பள்ளியே
என் அகவிருள் நீக்கி
அறிவொளி பெற்றது
உன் மடியினிலே
நண்பர்களாய் தேடி உன்னை
நாடி வந்து பாடி மகிழ்ந்து
பண்பாக பள்ளி பயின்றதும் உன் பாதத்திலே

உன் பள்ளியெனும் மைதானத்தில்
கூடி விளையாடி நின்றேன்
பார்போற்ற பல கலை கற்றேன்
பண்பான பாசமிகு ஆசானை பெற்றேன்
அவர்வழி பயின்றேன் கல்வி
பள்ளிதந்த பாடங்களை
பக்குவமாய் பதித்து வைத்தேன்
பாதைமாறிச் செல்லமாட்டேன்

பார்போற்ற வாழ்ந்திடுவேன்
பண்பான ஆசானின் பாசமது நான் மறவேன்
பள்ளி தந்த சொந்தங்களை
சொத்துக்களாய் பேணிக்காப்பேன்
அறிவகமே..
உன்னில் அறிவுத்தேன் அருந்திய
இனிய நாட்களுக்கு விடை கொடுக்கின்றேன்
கண்ணில் வடிவது கண்ணீரல்ல
பிரிவுத் துயரால் இதயவேதனையை

*வடியும் இரத்தத்தின் சுத்திகரிப்பு*
*பள்ளியே! பண்பகமே!*
*உன்னிடத்தே சிட்டாய் சிறகடித்தேன்*
*இன்று சிறகொடிந்தேன்*
*மீண்டும் பள்ளிவர துடிக்குது இதயம்*
*இனியும் வருமா?*
*உன்போல் ஓர் உதயம்.*

# எதிர்காலம்

*நிகழ்காலமே*
*உதிர்ந்த நிலை*
*எதிர்காலம்*
*சொல்லத் தேவையில்லை*
*முடிந்தகதை இறந்தகாலம்*
*முடிந்து விடும் கதை*
*நிகழ்காலம்*
*தொடரவிருக்கும் கதை*
*எதிர்காலம்*
*என்ன நிலையோ?*


விரும்பி உள்ளம் ஏற்குதே விடுமுறை என்றால்
வீண்பேச்சுக் கேட்டு வெட்டியாக
ஊர்சுத்தவா..?
விளையாட்டுத்தனமாக வீணாய் போய் விடவா?
பார்க்காத படமெல்லாம் பார்த்து பதம் கெட்டிடவா ?
இல்லாவிட்டால்
நீண்ட பயணப்பாதை சென்று தங்கி நின்று
சொந்தம் கொண்டாடிடவா
நண்பா! எம்

# விடுமுறை

கல்விக்கு முட்டுக்கட்டையடா
மோதிவிடாதே முட்டிவிடாதே
ஓய்வு மட்டும் கொடுக்காதே
ஆய்வெனும் கல்விக்கு
தொடர் முயற்சி தோற்றுவிடும்
எம்மையும் பிரித்துவிடும்
நண்பா படிப்பது உன் கடமை
படிப்பிற்பது என்கடமை
என்றோர் உன்னத நோக்குடைய
ஆசானுக்கும் எமக்கும் விடுமுறை
நீண்டதோர் இடைவெளி
புத்தியுள்ள பிள்ளைக்கு செவ்வரத்தை
நஞ்சா - வீணாக கழித்துவிடாதே
பாளாகப்போய் விடுவாய்.

நான் புகைப்பிடித்தேன்
புகை என்னைப் பிடித்துவிட
ஆதை தினம் கடைப்பிடித்தேன்
என் நுரையீரல் கறைப்பிடித்து விட்டது
கைவிட நினைத்தேன் - ஆனால்
நுரையீரல் காலாவதியாகி விட்டதே
காலம் கடந்த சிந்தனை
கானல் நீர் போலத்தான்
முளையிலே முதிர்ந்து விட்ட நிலை

# இழந்து போனேன் இளமையை




காலச் சக்கரத்தில் கல்லூரி எனும்
காந்தத்தால் கவர்ந்திழுக்கப்பட்டு
கல்விக்கு உருக் கொடுக்கும்
அறிவுத் திரட்டாய் இனிய கல்வி

சொந்தபந்தம் துறந்து வந்தாலும்
சோகம் மறக்க தோழமை நட்பு
கலங்கிய நெஞ்சம் கதிரொளி மீட்ட
கற்புக் கலங்கா உன்னத ஆதரவு.

ஏட்டுக் கல்வியை எட்டிப் பார்த்தோம்
அனுபவக் கல்வியில் ஏறி நின்றோம்
உருக்குலையா எத்தனை நினைவுகள்
உள்ளம் தொட்ட உன்னத உறவுகள்

மனம் இணைந்து மதம் போற்றினோம்
உளம் மகிழ்ந்து உறவு தீட்டினோம்
ஆலமர விழுதாய் நிலைத்து நின்று
அழியாத உறவு நித்திலம் வளர வேண்டும்.

# கல்லூரிக் காலம்



# இசை

வெண்தாமரைத் தாயவள்
கையொடு வீணை
தீந்தமிழ் மொழியொடு
தேன்கவி மீட்டிடவே...
இசையொடு கருவிகள்
உடல்கொண்ட உயிராய்
இறையருள் தெளித்திடவே...
பண்கொண்டு இசைபாடி
பதியவன் இன்னருள் கேட்போம்
பாட்டொடு இசை கலந்து
எம்மவர் மனம் கவர் கொள்வோம்
தாயவள் தாலாட்டில்
செவிவழி அரும்பிய இசை
வாழ்வொடு இரசனை
ஒப்பாரிவரையும்!
பங்கமிலா பண்கேட்டு
பருவமெய்திடும் நெஞ்சம்
மறுத்தாலும் உண்மையல்லோ?
கல்நெஞ்சம் கரைந்து விட
கவலைகள் கரையொதுங்க
புன்னகை தூறல் போடும்
இயல்பிசை இறை கொடுக்க
எம்மவன் அதைவடித்து
நவரசம் புலனுணர
நற்போசை பறையொலிக்கிறதே.

# சிந்தித்துப்பார்

விளையும் பயிரை முளையில் தெரியும்
விளைந்த பின்னே உண்மை புரியும்
அழகைக் கண்டு அடிமை கொண்டால்
அறிவு எதற்கு அதில் அர்த்தம் உண்டோ?

அன்பும் உண்டு பண்பும் உண்டு
ஆயிரம் உறவுகள் அருகினில் உண்டு
அடிமையென்று யாரும் இல்லையே
அகங்காரம் மண்ணில் ஆழவில்லையே

பாரினைப் பாரடா பார்புகழ் போற்றடா
பணிவு உன்னையே வாழவைக்குமே
தெளிவு கண்டால் தெரிந்து கொண்டால்
தெருவினில் ஓர் நாள் நிற்கமாட்டாய்


கடமைதனை உயிரென நினைத்தால்
காலங்கள் உனக்கு இனிமை தானடா
கனவுகள் கண்டால் நிஜங்களாகும்
கலங்கி நீயும் வாழ்வதேனடா..?

சோம்பல் உனை ஆட்சி செய்தால்
சோகம் உனை சூழ்ந்து கொள்ளும்
வாழ்வுதனை வாழக்கண்டால்
வரட்சியும் உனக்கு பசுமையாகுமே!

# பயணம்

காலிருந்தும் முடவன்
கண்ணிருந்தும் குருடன்
திசையறியா படகுப் பயணம்
நாலுதிசையும் செல்ல விரும்பி
நடு றோட்டில் நிற்கும் நிலை
கனவில் கொண்ட இன்பம்
நிலவில் கண்ட விம்பம் போல
இலக்கில்லாப் பயணம்





# என்றும் மரணித்ததில்லை

அறிவின் வழியே பண்பின் ஒளியே
அறிவுக்கு நீதானே அத்தாட்சி
தாய்மைக்குப் பிந்திய எம்
வாய்மைக்கு உந்திய உயிரும் நீதானே

கனப்பொழுதில் கனத்த கல்வி
கண்ணிமையாய் கற்றுத் தருவாய்
எந்தத் தொழிலும் உந்தன் வழியே
ஏணிப் படியாய் ஏற்றும் பணியே

எம் ஆறாம் அறிவை - உன்
ஆசிரியம்தானே ஆராட்சி செய்கிறது
எம் ஏழாம் அறிவாய் என்றும் நீயே
எளிமையாய் வலிமை தருவாய்

உன்னைப் பணிந்தேன் தெய்வமே
உலகம் தெளிந்து கொண்டோம்
அறியாமைக் கடலில் மூழ்கிய எமை
அறிவெனும் வள்ளமாய் கரை சேர்த்தாய்

தென்றலில் வந்த மாருதமாய்
தெய்வத்தை நேரினில் கண்டோம்
மனிதப் பிறவியிலே என்றும்
மரணித்ததில்லை உன் பணி.

# மனிதம்

மாற்றமொன்று வருமா அது மனித நேயம் தருமா ?
மனிதம் எங்கே இருக்கிறது மானிடா ?
அதை தேடிப்பார்த்தேன் கிடைக்கவில்லை
கிடைக்குமா? அது கிடைக்குமா?

கண்ணீர் இன்றி காலம் தீருமோ?
கலக்கமின்றி கழிப்புத்தான் சேருமோ?
எத்தனை எத்தனை ஏக்கம்
எதற்காக இப்படிப் பல தாக்கம்

கற்றவனும் இருக்கின்றான் இங்கே
மற்றவனும் இருக்கின்றான்
மனிதம் காத்தால் மாய்ந்து விடுவோமோ?
ஏன் மனிதம் மறந்து போனோம்

மந்தைக் கூட்டமாய் வாழ்வதை விட்டு
சிந்தை செய்வோம்- மனிதா
சில்லறைப் பேச்சை விட்டு
மனிதம் காப்போம் மானிடனாய் வாழ்வோம்.



# ஆசைப்பட்டேன்



கருவறையில் தினம் இருக்க
குழந்தையாய் தினம் சிரிக்க
இளைஞனாய் தினம் துடிக்க
முதுமையாய் தினம் முழுமை காண
ஆசைப்பட்டேன்
இறுதியாய்
இறப்பில்லாத இல் வாழ்க்கை
ஆசைப்பட்டேன் - ஆனால்
மரணப்படுக்கையில் தான்
உணர்ந்து கொண்டேன்
எதுவும் நிரந்தரமில்லை என்று

# தைப்பொங்கல்

தைபிறந்தால் வழிபிறக்கும்
தரணி எங்கும் ஆதவன் ஒளி சிறக்கும்
மாரி பொழிந்து மௌனித்து போகையிலே
பசுவை கண்சிமிட்டி நிலைத்திடவே....

பண்போடு கலைவளர்த்து
பண்பாட்டை சிலை செதுக்கி
உற்றமும் சுற்றமும்
கூடிக் குதூகலிக்கும் திருநாள்தானே
வருடத்தில் முதல் விழா - இது
இந்துக்களுக்கு தலைவிழா

ஆதியிலே வகுத்து வைத்து
ஆதவனுக்கு நன்றி சொல்ல
அறுவடையில் பச்சரிசி
பானையிலே பால்பொங்க
ஆனந்தத்தின் உச்சத்திலே
ஆர்ப்பரிக்கும் விழாதானே

பகளொளி பகிர்வதற்கு
பகலவன் மறுத்து விட்டால்
கண்ணிருந்தும் காட்சியில்லை
அகிலம் எங்கும் ஆட்சியேயில்லை

கண்ணெதிரே கண்ட கடவுளென
கதிரோனை கரம் கூப்பிடவே
உழவுத் தொழிலால் உரம் எடுத்தோர்
பண்பாட்டை பறைசாற்றி
செய்நன்றி பகிர்ந்திடுவோம்.

கரும்பு இனிக்க கனிகள் சிரிக்க
பயிர்களின் விளைச்சல் பயனாய்
ஊண் உருக்கி உழவு செய்வோன்
சேவை போற்றிடும் நல்ல தருணமிதுவே

புத்தாடை முகம் ஜொலிக்க
விருந்தோம்பல் கண்மகிழ
கலை நிகழ்வும் களியாட்டமும்
களைகட்டும் இத்தினமே.

## மேதை

உலகம் தெரிந்தால்
நீ மேதை
உணர்ந்து கொள்ளாத போது
நீ பேதை
பரந்தவெளி
திறந்த கதவு
அறிவுத் தேடல்கள்
ஆலமர விழுதாய்.

## அரங்கு

உயிர் உள்ளவரை
உலக அரங்கில்
உன் ஆட்டம்
பார்வையாளர்களுக்கு
பிடிக்கலாம்
பிடிக்காமலும் விடலாம்
உனது பாத்திரத்தை
நீயே முடிவுசெய்.

## மௌனம்

மனம் சொன்னது
மௌனம் காத்துக்கொள்
கடவுள் இருக்கிறார்
கடவுள் இருக்கிறார்
என்று.
மௌனம் என்ன
செய்ய முடியும்...?
எனக்குள் கேள்வி.

## கண்ணீர்

விழி வழியே
உதிர்ந்துபோன
உள்ளத்து
உணர்வுகள்
ஆறாக ஊற்றெடுப்பு

MSW



# நூலாசிரியரைப் பற்றி...

திரு.அ.தனுராஜ் என்றதும் அவர் பற்றிய என்னுடை மனப்பதிவில் கவிதை புனையும் ஒருவராகவே என் கண்முன்னே நிற்கின்றார். இவர் தற்போது 2ம் வருடத்தில் நாடகமும் அரங்கியலும் பாடநெறியை பயின்று வருகின்றார். இவர் தாய்மொழி, கலை, சமயம், விளையாட்டு என்பவற்றில் நல்ல ஈடுபாடு கொண்டவர். சமயப்பற்றும் மொழிப்பற றும் சமூதாயப் பற்றுமே இவரது கவிதை எழுதும் ஆற்றலை மேம்படுத் தியுள்ளது.

தன் ஆற்றலால் தனது நண்பர்களின் பிறந்தநாள் விழாக்களின் போது கவிதை மூலமே இவர் வாழ்த்துக் கூறுவார். இவ்வாழ்த்துப்பா கவித்துவம் மிக்கதாக இருக்கும். "நெஞ்சத்து வரிகள்" எனும் கவிதை நூலில் பல உணர்வுகளை வெளிப்படுத்தியுள்ளார். இவரின் உணர்வு பூர்வமான சிந்தனைகள் சிறந்த கவிதைகளாக இந் நூலில் பிரதிபலிக்கின்றன.

இவர் மட்டக்களப்பு அம்பிளாந்துறை கலைமகள் மகா வித்தியாலயத் தில் தனது பாடசாலைக் கல்வியை கற்றார். கவித்துவ ஆற்றலை பாடசாலை காலத்திலும் வெளிப்படுத்தியுள்ளார் என்பதில் ஐய மில்லை. மற்றும் இவர் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியிலே விளையாட்டுத்துறைத் தலைவராகவும் திகழ்கின்றார்.

இவரின் முயற்சி, ஆர்வம், நம்பிக்கை என்பன மீண்டும் மீண் டும் நூல்களாக வெளிவரட்டுமென்று நெஞ்சத்து வரிகளை மலர் வித் தவனுக்கு நெஞ்சம் மகிழ்ந்த வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்.

*திரு.க.திலகநாதன்,*
*விரிவுரையாளர்,*
*யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி.*

MSW

ஜெயஸ்ரீ பிறிண்டேர்ஸ், யாழ்ப்பாணம். 021 221 9129